# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

| MCOP. No. 128/2013 | | | |
|---|---|---|---|
| Name: | சுப்பிரமணி | Religion: | இந்து |
| Father's Name: | முத்துக்கவுண்டர் | Caste: | |
| Village: | கத்தேரி | Calling: | தறி தொழில் |
| Taluk: | சங்ககிரி | Age: | 48 |

Date: 25.10.2019 – PW –1

மனுதாரர் தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை

நான் மனுதாரர் தரப்பில் 1 வது சாட்சி. எனது முதல் விசாரணை சாட்சியத்திற்கான நிரூபண பிரமாணப் பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் நன்கு தெரியும். அதை படித்துப் பார்த்து கையெழுத்து செய்தேன். தாரமங்கலம் காவல் நிலைய குற்ற எண். 170/2012 பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை உண்மை நகல் ம.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்கிறேன். ரெக்ஸோ ஆர்த்தோ மருத்துவமனையில் வழங்கப்பட்ட டிஸ்சார்ஜ் ம.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்கிறேன். கோவை கே.ஜி. மருத்துவமனையில் வழங்கப்பட்ட டிஸ்சார்ஜ் ம.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்கிறேன். 17.6.2012 தேதியில் ரெக்ஸோ ஆர்த்தோ மருத்துவமனையில் வழங்கப்பட்ட டிஸ்சார்ஜ் ம.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்கிறேன். சிவசக்தி பிசியோதொரபி மருத்துவமனையில் வழங்கக்பட்ட டிஸ்சார்ஜ் சம்மரி ம.சா.ஆ.5 ஆக தாக்கல் செய்கிறேன். 4.7.2012 தேதியில் ரெக்ஸோ ஆர்த்தோ. மருத்துவமனையில் வழங்கப்பட்ட டிஸ்சார்ஜ் ம.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்கிறேன். 26.7.2012 தேதியில் ரெக்ஸோ ஆர்த்தோ மருத்துவமனையில் வழங்கப்பட்ட டிஸ்சார்ஜ் ம.சா.ஆ.7 ஆக தாக்கல் செய்கிறேன். விபத்துக்கான மாதிரி வரைபடம் உண்மை நகல் ம.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்கிறேன். விபத்துக்கான பார்வை மகஜர் உண்மை நகல் ம.சா.ஆ.9 ஆக தாக்கல் செய்கிறேன். தாரமங்கலம் காவல் நிலைய குற்ற எண்.170/2012 ல் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கை உண்மை நகல் ம.சா.ஆ.10 ஆக தாக்கல் செய்கிறேன். 1 ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவுச் சான்றிதழ் ம.சா.ஆ.11 ஆக தாக்கல் செய்கிறேன். 1 ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவுச் சான்றிதழ் நகல் ம.சா.ஆ.12 ஆக தாக்கல் செய்கிறேன். விபத்து சமயத்தில் சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கான மருத்துவ பில்கள் ம.சா.ஆ.13 ஆக தாக்கல் செய்கிறேன். (எதிர்மனுதாரர் தரப்பில் பல பில்களில் மருத்துவர் பெயர் குறிப்பிடப்படவில்லையென ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). சிகிச்சையின் போது எடுக்கப்பட்ட எக்ஸ்ரே ம.சா.ஆ.14 ஆக தாக்கல் செய்கிறேன். எனது தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்களை ஏற்றுக் கொண்டு மனுப்படி உத்தரவிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

குறுக்கு விசாரணை வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/-Subramani,

Sd/-M.Mekala Mythili,
Sub Judge, Sankari.